முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை விலையிலே பேருந்து வழங்குவது என்றால் அதிலே ஊழல் குற்றச்சாட்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே கல்வி நிறுவனங்கள் ஏதாகிலும் இருக்குமானால்—உறுப்பினரே நடத்தினாலும் சரி, அல்லது அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தினாலும் சரி, அல்லது அவருக்கு வேண்டியவர்கள் நடத்தினாலும் சரி, அதற்குரிய பரிந்துரையைச் செய்தால் பேருந்துகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 266, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

266—

திட்டச்சேரி-குத்தாலத்திற்கு பேருந்து இயக்குதல்

* **23256**—திருமதி கே. பஞ்சவர்ணம்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், திட்டச்சேரியிலிருந்து குத்தாலத்திற்கு நரிமணம் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை தடத்தில் நரிமணம் குறுக்கு ரோட்டிலிருந்து புறாக்கிராமம் வரையிலுள்ள 8 கி.மீ. தூரம் பேருந்து வசதி பெறாத கிராமப் பகுதியாகும். எல்லா காலங்களிலும் பேருந்து இயக்குவதற்கேற்ற வகையில் சாலை அமையவில்லை. எனவே, மழைக்காலங்களிலும் பேருந்து இயக்குவதற்கேற்ற சாலையாக சான்றளிக்கப்படாததன் காரணமாக பேருந்து இயக்க இயலவில்லை.

திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், மக்களின் அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து கொண்டிருக்கின்ற, மக்களாட்சி நடத்திவரும்

1995 ஏப்ரல் 7]

மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த நல்லாட்சியில் நன்னிலம் தொகுதியைச் சேர்ந்த திட்டச்சேரியிலிருந்து, குத்தாலம் வழியாக நரிமணம் வரை பேருந்து இயக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்தில், ஆயிரம் குடும்பங்கள் வசிக்கக்கூடிய பகுதிகளுக்கெல்லாம் பேருந்து விடவேண்டும் என்று சொல்லி மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தத் துறையானது இந்தப் பகுதியில் சாலை வசதியைப் பொறுத்துவரையில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் சிறப்பாக சாலைகளைச் செப்பனிட்டு இருக்கிறது. ஒரு சில இடங்களில் மட்டும் சாலை வசதி குறைவாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். சுமார் 10, 15 கிராமங்கள் இங்கே குக்கிராமங்களாக இருக்கின்றன. அங்கிருந்து குழந்தைகள் படிப்பதற்காக, உயர்நிலைப்பள்ளிக்கு, மேல்நிலைப் பள்ளிக்கு வரவேண்டுமென்று சொன்னால் (மணியடிக்கப்பெற்றது) திட்டச்சேரிக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. மருத்துவ வசதி பெற வேண்டுமென்று சொன்னாலும் திட்டச்சேரி, திருமருகல் போன்ற பகுதிகளுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி. கே.பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் கூட, அங்கே ஒரு தாய் பிரசவிக்க முடியாமல் மரணம் அடைந்தாள் என்பதையும் நான் அறிந்தேன். ஆகவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதிக்கு குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு வகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த கேள்விக்கு நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் அந்தச் சாலைகளில் மழைக் காலங்களில் மட்டும்தான் பேருந்து இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டேன். நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அவர்களும், சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் அவர்களும் அந்தப் பகுதியை பார்வையிட்டு, அதற்குப் பிறகு அந்தப் பகுதியில் மழைக் காலங்களில் பேருந்துகளைத் தொடர்ந்து இயக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி அந்தச் சாலையை செப்பனிட்ட உடனேயே, எப்போது

வேண்டுமானாலும், 24 மணி நேரத்தில் கூட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி கே. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளைப் பொறுத்தமட்டில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பேருந்து கேட்டால்—பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிய மாத்திரத்திலே உடனடியாக சாலைகளை செப்பனிட்டுத் த்ருகிறார்கள்—நீண்ட காலமாக அந்தப் பகுதியினுடைய கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையில்-சென்ற வருடம் கூட அந்தப் பகுதியிலே ஒரு சாலை மறியல் போராட்டம் நடத்தினார்கள்—அப்போது போக்குவரத்துத் துறை மேலாளர் அவர்களும் வட்டாட்சியர் அவர்களும் அங்கே வந்து ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்—அதையும் கவனத்தில் கொண்டு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் சாலையைச் செப்பனிடவும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேருந்து விடுவதற்கும், ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற திங்கட்கிழமையிலிருந்து அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) மழைக்காலங்கள் வரும்போது, மழைக் காலத்திற்குப் பிறகு அந்தப் பேருந்துகளை இயக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மழைக் காலத்திற்கு முன்னாலேயே அந்தச் சாலையை செப்பனிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே போதுமானது. வரும் திங்கட்கிழமை முதல் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலுடன் அந்தப் பேருந்துகள், அந்தப் பகுதியில் இயக்கப்படும்.

முற்பகல் 10.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் க. கோபால்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்கட்கிழமையிலிருந்து பஸ் விடப்படும் என்று சொன்ன போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது என்னுடைய தொகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், சாலை வசதிகள் இப்போது ஓ.என்.ஜி.சி. மற்றும் எம்.ஆர்.எல். போன்ற

நிறுவனங்கள் அங்கு சாலையை மிகச் சிறப்பாக பராமரித்து வருகின்ற காரணத்தாலும், மேலும், அங்கு சிலிகைட் பேக்டரீஸ் மற்றும் எம்.ஆர்.எல். அலைடு பேக்டரீஸ் ஏற்பட்டுள்ள காரணத்தாலும், அங்குள்ள தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 267, திரு. இரா. தங்கராசு, இருக்கையில் இல்லை. டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

267—

மகிழம்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

***34236—**திரு. இரா. தங்கராசு :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மகிழம்பாடி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகு அழகாக இல்லை என்று சொல்லி விட்டார். அந்தக் கிராமத்தில் சுற்றளவில் 11 கிலோ மீட்டர் அளவில் எந்த மருந்தகமும் இல்லை. அங்குள்ள ஏழை விவசாய மக்கள் அனேகமாக கால்நடையையே நம்பி வாழ்கிறார்கள். கால்நடைக்கு ஏதாவது ஒன்று என்றால் அவர்கள் 15 கிலோமீட்டருக்கு அந்தப் பக்கம் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகிறது. இதனால் மக்களும், மாக்களும் மிகவும் அவுதியுறுகிறார்கள். இதை மனதில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு சப்-சென்டரையாவது அமைத்துத் தருவாரா ? அப்படி இல்லையென்றால் பை-வீக்லி டாக்டரையாவது அனுப்பி